# DEPOSITION OF WITNESS.
# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI
# S.C.No.70/2021
# PROSECUTION WITNESS No - PW- 11

Name : மாரிமுத்து Caste:

Father Name Calling: S.I

Village: Religion:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of February 2025.

1ம் எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2ம் எதிரி விசாரணையின்போது ஆஜரில்லை அவருக்காக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சென்னை விமானநிலையத்தில் உள்ள குடியேற்ற பிரிவில் சார்புஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 19.06.2021ல் பூவந்தி காவல்நிலைய சார்புஆய்வாளராக பணியிலிருந்த போது காலை 7.00 மணியளவில் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா பாப்பாகுடி கிராமத்தைசேர்ந்த கார்த்திகைச்சாமி மனைவி முத்துலெட்சுமி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று பூவந்தி காவல்நிலைய குற்றஎண்.124/2021 இதச 302ன் படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல்தகவல்அறிக்கை **அ.சா.ஆ.16**. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட முதல்தகவல்அறிக்கையும், புகார்மனுவின் அசலையும் உரிய நீதிமன்றத்திற்கு துரித தபால் மூலம் அனுப்பிவைத்தேன். ஏனைய நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தலைமைக்காவலர் தமிழரசி மூலம் அனுப்பிவைத்தேன். மேலும் வழக்கு கோப்பை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்து அவருக்கு விசாரணைக்கு உதவியாக இருந்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவத்தின் முதல் நாள் இரவு 8.00 மணிக்கே இறந்த நபரை எதிரிகள் அழைத்துச்சென்றதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது குறித்து புகார்தாரரின் அக்கா மகன் ராமச்சந்திரனோ, புகார்தாரரோ, இந்த புகாருக்கு முன்பு தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் குறித்து மறுநாள் தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசா.1ன் புகார்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.18 17:42:06 +0530

கொடுக்கப்படுவதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு நான் சென்று, அங்கிருந்த ஆட்களை விசாரித்தேன் என்றால் சரிதான். அசா.1 புகாரை யார் எழுதியது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. புகார்தாரர் மேற்படி அசா.1 புகாரை கொடுக்கவில்லை என்றும், எழுதாத வெள்ளைப்பேப்பரில் புகார்தாரரிடம் கைரேகை பெற்று அதன் பின்பு இந்த வழக்கிற்கு ஏற்றவாறு நாங்கள் புகாரை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட உண்மையான எதிரிகளை கண்டுபிடிக்க முடியாததால் இந்த எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுவிட்டோம் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.18 17:42:12 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை